**NEW SCIENCE ACADEMY**
Infront of BMC Jaffna
PAPER CLASS
Chemistry by சண்
Organic — 12-30
In - Organic — 1-30
TUE. THU. FRI
ஆரம்பம்: 18. 05. 90

பக்கங்கள் எட்டு விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 102 வெள்ளி 18-5-1990 வைகாசி 04 ஷவ்வால் 22

**NEW SCIENCE ACADEMY**
Infront of BMC Jaffna
91 A'L
In- Organic
S. P. தொகுப்புகள்
Sat — Sun 7,00—8:00 am.
By சண்

# தமிழ் போராளிக் குழுக்களிடையே சமரசம் ஏற்படுத்த அரசு முயற்சி?!

## ஐக்கிய இலங்கைக்குள்ளேயே பிரச்சனை தீர்க்க விருப்பம் - ரஞ்சன்

மோதலில் ஈடுபட்டுவரும் தமிழ் குழுக்களிடையே சமரசத்தை ஏற்படுத்தும் முகமாகவே தாம் ஈ. பி. ஆர். எல்.எப். தரப்பினருடன் பேச்சுக்கள் நடாத்தியதாக பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில்இக்கருத்தை வெளியிட்ட அமைச்சர் ஐக்கிய இலங்கைக்குள்ளேயே பிரச்சினையைத்தீர்க்கவிரும்புகிறோம் எனச் சொன்னார்.

கல்முனையில் 19 பொலிஸார் விளையாட்டு நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்துவிட்டு திரும்பிக் கொண்டிருக்கையில் கடத்திச் சென்று பின்னர் விடுவிக்கப்பட்டது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் இந்நிகழ்ச்சிகள் தொடராமல் இருக்க மேல் மட்டத்தில் உள்ளவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

ஈ. பி. ஆர். எல். எப்.புடன் தாம் நடாத்திய பேச்சுக்கள் பற்றி குறிப்பிட்ட அமைச்சர் ஈ பி. ஆர். எல். எப், கடந்த காலங்களில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து தம்மிடம் கவலை தெரிவித்தனர் என்றார், ஈ. பி. ஆர். எல். எப். உடன் அரசு நடாத்திய பேச்சு விபரங்கள் எதையும் அமைச்சர் கூறமறுத்துவிட்டார்.

## ஒக்ஸ்போட் ஆங்கில அகராதியிலும் புலிகள்

தமிழீழத்தில் மாத்திரமின்றி சர்வதேச ரீதியிலும் செல்வாக்குப் பெற்றுத் திகழும் விடுதலைப் புலிகளின் பெயர், சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள ஒக்ஸ்போட் ஆங்கில அகராதியிலும் இடம்பெற்றுள்ளது. 'Tigers' என்பதற்கு இன்னோர் அர்த்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் என்று இவ்வகராதியில் குறிப்பு இடம் பெற்றுள்ளது.

## பலாலி இராணுவ முகாம் பலப்படுத்தப்படுகிறது

பலாலி ராணுவமுகாம் திடீரென விஸ்தரிக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டு வருகின்றது நேற்றைய தினம்தொடக்கம் பாரிய டாங்கி ஒன்று பாதுகாப்பு அரணில் நிறுத்தப்பட்டுள்ளது.

பலாலி முகாமைச் சுற்றியுள்ள பற்றைகள் புள்டோசர் மூலம் அழிக்கப்பட்டு முட்கம்பி வேலிகள் அடிக்கப்பட்டு வருகின்றன. திடீரென இலங்கை ராணுவத்தினர் மேற்கொண்டு வரும் முகாம் விஸ்தரிப்பு நடவடிக்கையினால் பொதுமக்கள் மத்தியில்பீதி ஏற்பட்டுள்ளது.

## யாழ்-கொழும்பு வார இறுதி ரயில் இன்றுமுதல் ஆரம்பமாகிறது

யாழ் - கொழும்பு வார இறுதி விசேட ரயில் சேவை இன்று ஆரம்பமாகவுள்ளது. இன்று இரவு 9.15 க்கு கொழும்புக் கோட்டையில் இருந்து புறப்படும் இந்த விசேட ரயில் நாளைக் காலை ஆறு மணிக்கு காங்கேசன் துறையை வந்தடையும்.

ஞாயிறு மாலை ஐந்தரை மணிக்கு காங்கேசன்துறை

— 8 ஆம் பக்கம் பார்க்க

'முரசொலி' அனுசரணையுடனான சைக்கிளோட்டப் போட்டி

## வவுனியாவில் நாளை மாபெரும் கலை, விளையாட்டு விழா

வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகத்தினர் நடாத்தும்12 வது விளையாட்டு விழா நாளை காலை 7மணிக்கு ,முரசொலி அனுசரணையுடனான 115 மைல்சைக்கிளோட்டப் போட்டியுடன்ஆரம்பமாகின்றது.

மாலையில் கலை நிகழ்ச்சிகளுக்கு வன்னிப் பிரதேச கலை, கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. போஜன் தலைமை வகிப்பார்.

விசேட அதிதியாக விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி வவுனியாப்பகுதி மகளிர்ப் பொறுப்பாளர் ரதி கலந்து

—8 ஆம் பக்கம்பார்க்க

## வட்டு. பகுதியில் திடீர் பரிசோதனை

## காலாவதியான மருந்துகள் விற்பனை கண்டுபிடிப்பு

வட்டுக்கோட்டைதொகுதியிலுள்ள சில தனியார் (பாமர்சி) மருந்துச்சாலைகளில்திடீர் பரிசோதனை மேற்கொண்ட யாழ் உணவு, மருந்துப் பரிசோதகர்கள் குழுவினர்அங்கு திகதி காலாவதியான பழுதடைந்த மருந்துக் குளிசைகள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தனர். இவற்றை தெரி

— 8 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் மாவட்டத்தில் 10 ஆண்டுகள் சேவை புரிந்த ஆசிரியர்களுக்கு கட்டாய இடமாற்றம்

யாழ் மாவட்டத்தினுள் 10 ஆண்டுகள் தமது ஆசிரிய சேவையை பூர்த்திசெய்த 45 வயதிற்குட்பட்ட ஆசிரியர்களுக்கு கட்டாய இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

தமது சேவைக்காலத்தில் எப்போதும் வெளிமாவட்டங்களில்பணிபுரியாதவர்களுக்கே முக்கியமாக இந்த கட்டாய இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது

பல ஆசிரியர்கள் தமது சொந்த இடங்களில் பலவருடகாலமாக கடமையாற்றி வருவதனாலும் வெளிமாவட்டங்களில் ஆசிரியபற்றாக்குறை ஏற்பட்டுள்ளதனாலும் மேற்படி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (03)

## தமிழர் ஆசிரிய சங்க மாநாடு ஜூன் மாதம் 8ம், 9ம் திகதிகளில்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த மகாநாடு ஜூன் 8ம், 9ம் திகதிகளில் யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இதற்கானஒழுங்குகள்பொதுச் செயலாளர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சங்க நிர்வாகிகள் குழு ஒன்றினால்

— 8ஆம் பக்கம் பார்க்க

## கைதுசெய்யப்பட்ட சந்திரசேகர் ஓர் தீவிரவாதி-பொலிஸ் அதிபர்

கைது செய்யப்பட்டுள்ள மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் ஓர் தீவிரவாத குழுவின் தலைவராக இருந்தவர். கைது செய்யப்பட்ட தீவிரவாத உறுப்பினர் ஒருவர் அளித்த வாக்கு மூலத்தில் இருந்தே இவரை பொலிஸார் கைது செய்தன.

— 8ஆம்பக்கம் பார்க்க

## வடக்கு, கிழக்கு பாடசாலைகளில் இன்று முதல் மதிய உணவுக்குப் பதிலாக உணவுமுத்திரை

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் இன்றையதினம் தொடக்கம் மதிய உணவு வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாண கல்விச் செயளாளரின் 14ம் திகதிய சுற்றறிக்கையின் படி வடக்கு கிழக்குப் பாடசாலைகளில் எதிர்வரும் திங்கள் முதல் உணவு முத்திரை திட்டம் அமுலுக்கு வருகின்றது.

அடுத்த திங்கள் முதல் மாணவர்கள் மதியஉணவை வீட்டில் இருந்து கொண்டு வர வேண்டும். அவை ஆசிரியர்களினால் உறுதிப்படுத்தப்படும், பின்னர் ஒவ்வொரு மாதம் முடிவிலும் அதற்குரிய உணவுமுத்திரை வழங்கப்படும். இவ்உணவு முத்திரைக்கான பொருட்களை பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் மொத்தமாகவோ, சில்லறையாகவோ பெறலாம். சுத்தமான போசனையின்மை வீண்விரயம், மோசடி நடவடிக்கைகள் காரணமாகவே இத்திட்டம் அமுல் படுத்தப்படுவதாக அந்த சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### தவறி விட்டது

காரைநகர் சீநோர் படகு தொழிற்சாலையிலிருந்து மண்டைதீவுக் கிடையில் 26/8020 இல.1D7இனது Extra Wheel (750-16) (சித்திவிநாயகர் அராலி) தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் முரசொலி காரியாலயத்தில் அறிவிக்கவும். 05126

### புத்தகம்

புதிய உயர்தர விலங்கியல் பகுதி II கரப்பான் தேரை விளக்கப் படங்களுடன் உள்ளடக்கிய அரிய நூல். ஆசிரியர் K. சங்கர்ஐயர் B. Sc வெளியீடு, விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். 05041


## நீர்வேலியில் நாடக விழா

இறந்த போராளிகளின் நினைவுத் தூண்கள், மற்றும் சமாதிகள் கட்டட நிதிக்காக நாடகவிழா ஒன்றை எதிர் வரும் 19 ந்திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல் லூரியில் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விழாவில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கலைகலாசாரப் பிரிவின் 'களத்தில் காத்தான்' என்ற நாடகமும் மறைந்த வி.வி. வைரமுத்துவின் 'பூதத்தம்பி' நாடமும் இராஜன் இசைக் குழுவின் 'புரட்சிக்கானங்கள்' இசை நிகழ்ச்சியும் வி. பு. ம. மு. கலை கலாசாரப் பிரிவின் 'நல்லதைச் செய்வோம்' என்ற வில்லிசை நிகழ்ச்சியும் நடைபெற உள்ளன.

## காவலூரில் கடுங்காற்று

கடந்த சில தினங்களாக காவலூரில் கடுங்காற்று வீசுகின்ற படியால் மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை இதனால் மீனுக்குத் தட்டுப்பாடும் விலை ஏற்றமும் ஏற்பட்டுள்ளது.

## இரண்டாம் தவணை மேலும் நீடிப்பு

பாடசாலை இரண்டாம் தவணைக் காலம் ஆகஸ்ட் 9 ஆம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது.

முன்னர் பாடசாலைகள் ஜூலை மாதம் 20 ஆம் திகதியே மூடுவதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. மூன்றாம் தவணை செப்டெம்பர் 5 ம் திகதி ஆரம்பமாகும். க. பொ. த. உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் 10 ஆம் திகதி ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டதை அடுத்தே இவ்வாறு இரண்டாம் தவணை நீடிக்கப்பட்டது.

## தெல்லிப்பழையில் 'சங்கநாதம்'

'சங்க நாதம்' சொற்பொழிவுப் பயிலரங்கு 20 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செ.நாவரசன் தலைமையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கலாநிதி நா.சுப்பிரமணியன் ஆசியுரையை வழங்குவார் தலைமையுரையை ச. விநாயகமூர்த்தி, க.உமா மகேஸ்வரன் ஆகியோர் வழங்குவர்.

சோ.பத்மநாதன், அனுவை.நாகராஜன், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் பார்வையாளர் கருத்துரை வழங்குவர். செல்வி .ந நவதர்சினி நன்றியுரை வழங்குவார்.

## இன்று சாவகச்சேரியில்

(நாவற்குழி)

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் ஆங்கில தினம் இன்று வெள்ளிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் திரு. வீ. கயிலேஸ்வரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் கல்வியதிகாரி திரு. எஸ். வீ, மகேசவேலு பிரதம விருந்தினராகவும், சாவகச்சேரி வடக்கு கொத்தணி அதிபர் திரு. கே எஸ். குகதாசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள், (ப-5

பொருளாதார, வேலைவாய்ப்புத் துறை

## யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஈடுபாடு

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை இந்து இளைஞர், யுவதிகளின் பொருளாதார, சுய வேலை வாய்ப்புத் துறையிலும் ஈடுபட உள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. வே, கெ. தனபாலன் தெரிவித்தார்.

கிராம ரீதியாகச் சுயதொழில் வேலைவாய்ப்பும், தொழிற்பயிற்சியும் இந்து இளைஞர் மன்றங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் என்றும், பனம் பொருள் உற்பத்திப் பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதுடன், பனம் பழம் சேகரிப்பு பனம்பழச்சாறு உற்பத்தித் துறைகளிலும் இந்து இளைஞர் மன்றங்கள் ஈடுபடுத்தப்படும் என்றும், இதற்கான தொழில் நுட்ப உதவிகளை வழங்கவும், சந்தைப் படுத்தவும் பனை அபிவிருத்திச்சபை முன்வந்து உள்ளது என்றும் அவர் தெரிவித்தார் (36)


## 31-ம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 20 | | 18 |
| 08 | | 04 |
| 1924 | | 1990 |



### இளையவி கோபால்

அன்புத்தெய்வமே எம்மை விட்டுப்
பிரிந்து இன்று 31 நாளாகியும்
இன்றும் உம் பசுமை நினைவு எம்மை
விட்டுப் பிரியாது துடிக்கின்றோம்.
உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

இங்ஙனம்
மனைவி, மைத்துனர்,
தங்கை,

05127

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 19 | | 30 |
| 9 | | 5 |
| 1927 | | 1989 |



### திருமதி சற்குணபூபதி கணேசு

அன்னாரது முதலாவது ஆண்டு நினைவு தினமான 19-5-1990 சனிக்கிழமை அன்று நடைபெறும் மதிய போசனத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

'ஆலய முன்றல்'
கோப்பாய் வடக்கு
கோப்பாய்

கணவன், பிள்ளைகள்

05129

## உதவித் தாதியர் பயிற்சிநெறி

## TRAINING FOR NURSES - AIDE

### 19-05-1990-இல் ஆரம்பமாகவுள்ளன

- ★ தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N, O.) விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன.
- ★ பதினெட்டு மாத கால பாடத்திட்டங்கள்.
- ★ ஆறுமாத கால செய்முறைப் பயிற்சிகள்
- ★ செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ். நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன.
- ★ அரச அங்கீகாரம்பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்,
- ★ பாடத்திட்டங்கள் யாவும் தமிழ்மொழி மூலம் போதிக்கப்படுகின்றன.
- ★ இலவச "அக்கு பங்சர்" பயிற்சிகள்.

ஆண் உதவித்தாதியர் பயிற்சிக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

உங்கள் பதிவுகட்கு
அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

## சாயி மெடிக்கல் அக்கடமி

இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

05119

## LONDON EXAMS

## NOV / DEC - 90

| | ஆரம்பம் |
|---|---|
| C. I. M. A - Stage I (London) | 2- 6- 90 |
| I. D. P. M - part I (London) | 2- 6- 90 |
| A. A. T. - Stage I (Sri Lanka) | 2- 6- 90 |
| I. A. B. - (Book Keepers) (London) | |
| Foundation | 2- 6- 90 |
| Inter | 9- 6- 90 |
| Final | 9- 6- 90 |

Basic, dBase, III + Lotus 1, 2, 3
Word Processing பயிற்சிகள்
20. 05. 90 முதல் ஆரம்பமாகின்றன

For details

## School of Business Administration

C. I. M. A யினால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்

16, 3rd Cross Street
(O L R தேவாலய மேற்குப்பக்கம்)
Jaffna

05130

# அலரிவிதை தற்கொலைகள்

கடந்த சில மாதங்களாக அலரிவிதை உண்டு தற்கொலை செய்யும் செய்திகள் அடிக்கடி பத்திரிகைகளில் வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது,

இந்த அலரி விதைத் தற்கொலைகள் பொதுவாக யாழ் . குடாநாட்டின் தீவகப்பகுதிகளிலேயே அதிகமாக இடம்பெறுவதை அவதானிக்கக் கூடியதாகவும் உள்ளது.

இந்த அலரிவிதைத் தற்கொலைகளில் பெரும்பாலானவை குடும்ப விவகாரங்களினால் ஏற்பட்ட சர்ச்சைகளினாலேயே நடைபெற்று வருகின்றன.

சுதந்திரத்திற்காக...... சுய நிர்ணய உரிமைக்காக, தமக்காக அல்லாது தம்மினத்திற்காக உலகமே வியக்கும் அளவிற்குத் தியாகங்கள் இடம் பெற்ற இந்த மண்ணில் ... கேவலம் சாதாரண குடும்ப விஷயங்களுக்காகத் தற்கொலைகள் இடம் பெறுகின்றன.

முழுத் தமிழ் இனத்தையுமே தலை குனியச் செய்யும இந்தக் குடும்ப விவகாரத் தற்கொலைகள் ஒவ்வொருவரும்...... ஒவ்வொரு தனி நபரும் உணர்ந்து நிறுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

அலரி விதைகளால் இன்று ஏற்படும் தற்கொலைகள் அதிகரித்து வருவதற்கு முக்கிய காரணமாக இருப்பது தற்கொலை செய்பவர்களுக்கு மிக இலகுவாகக் கிடைக்கக் கூடியதாக இவை இருப்பதினாலேயேயாகும்.

அலரி மரங்கள் இங்கு இயற்கையாகவே தோன்றியவை அல்ல. இந்திய தமிழகக் கரையோர நகரான நாகபட்டினப் பகுதியிலேயே இவை ஆரம்பத்தில் பரவிக் காணப்பட்டன.

இந்தியாவில் பூஜைகளுக்காக அதிகமாக அலரிப் பூ பாவிக்கும் காரணத்தினால் அங்கிருந்து வந்த யாத்திரிகர்கள் அலரி விதைகளை இங்கு கொண்டுவந்து நட ஆரம்பித்தனர்.

வறட்சியைத் தாங்கக் கூடிய தாவரமாகையால் அலரியும் விரைவில் குடாநாடு எங்கும் இலகுவில் பரவத் தொடங்கியது.

இவ்வாறு இறைவனைப் பூஜிப்பதாகக் கொண்டு வந்த தாவரத்தினால் இன்று பலர் இறைவனடி சேர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இன்று இந்த அலரி மரம் இல்லாத வீடுகள் குறைவு என்றே சொல்லலாம். இதனால் குடும்பத் தகராறு என்றதுமே முன்னரைப் போல் பொலிடோல் என்றோ தமரோன் என்றோ பூச்சி நாசினிகளைத் தேடித்திரியத் தேவையில்லை. வளவில் இறங்கி அலரி விதையை எடுத்து உண்டு விட்டால் போதும்!

அலரிவிதையில் உள்ள பால்போன்ற திரவமும் அதன் இழையத்தில் உள்ள இரசாயனப் பதார்த்தமுமே உயிரைப் பறிக்கும் சக்தி பெற்றவை.

அலரிவிதையை உண்டதும் அது முதலில் குறிப்பிட்டநபரின் வயிற்றுப்பகுதியின் மென்மையான இழையங்களைத் தாக்குகிறது. ஆனால் உடனடியாக உயிரைப் பறித்துவிட மாட்டாது.

இதனால்தான் அலரிவிதையை உண்டவரை வைத்தியசாலைக்கு உடனே எடுத்துச் சென்றுவிட்டால் காப்பாற்றி விடலாம் என வைத்தியர்கள் அறிவுறுத்துகின்றனர்.

ஆனால் அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதை விடுத்துத் தேவையில்லாது அலறிப் புடைத்து பதட்டத்துடன் இங்கும் அங்கும் ஓடித்திரிந்து காலத்தை கடத்துவதால் ஓர் உயிரை மீட்க முடியாத இடத்திற்கே அனுப்பி வைத்துவிடுகின்றோம்.

அலரி விதைத் தற்கொலைகளைக் குறைக்க சகல அலரி மரங்களையும் வெட்டி விடுவது தான் சிறந்த வழி என அண்மையில் ஒரு வாசகர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

மனிதனின் இத்தகைய கோழைத்தனமான செயலுக்காக அந்த அப்பாவி மரத்தை நொந்து பயனில்லை. எய்தவன் இருக்க அம்பை நோகமுடியாது.

தற்கொலை செய்யத் துணிந்து விடுபவர்கள் தமது மனப்போக்குகளை மாற்றிக்கொள்வதே தற்கொலைகளைக் குறைக்கச் சரியான வழி.

நாம் தற்கொலை செய்வதால் யாருக்கு இலாபம். வீணாகக் குடும்ப விவகாரத்திற்காகத் தன்னை அழித்துக் கொள்வதால் தம்மை அண்டியவர்களைக் கூட சமுதாயத்தில் பழிச் சொற்களைக் கேட்க வேண்டியவர்களாக்கின்றார்கள்.

ஒவ்வொருவரும் தானாக உணர்ந்து செயற்பட வேண்டுமேயன்றி ''அலரிவிதை'' தற்கொலையைக் குறைப்பதற்குப் பாவம்...... அலரி மரத்தையே அழித்து விட வேண்டும் என எண்ணுவது மிகப் பெரிய தவறாகும்.

## இதயநாதம்

18-05-1990 வியாழக்கிழமை

நலவாக்கு

சாவதற்கு முன்னால் நான் ஒருமுறையேனும் சத்தியத்துடன் அணிவகுத்துச் செல்ல வேண்டும். —கார்க்கி

[illegible] யாழ்ப்பாணம்

# மலையகத்திலிருந்து தமிழகம் திரும்பும் தமிழர்;

# சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்த கதை (2)

### இராமேசுவரம்,

இங்கு வந்த பின்னர் பல மணி நேரங்கள் காத்துக் கிடக்க வேண்டியுள்ளது. ஏனைய பயணிகள் யாவரும் போன பின்னரே இவர்களுக்காக மறுவாழ்வு அதிகாரிகள் தயாராவர்.

### இராமசாமி.

இதற்கிடையில் பெரும் திட்டமிட்ட களவுகள் இங்கு நடைபெறுகிறது. கள்ளக் கடத்தல் காரர்கள் இவ் அகதிகளைப் பயன்படுத்தித் தமது தொழிலை மிக இலகுவாக கடந்த சில வருடங்களாகச் செய்து வருகின்றனர். இவர்களின் பொருட்களோடு கடத்தல்காரரின் பொருட்களும் ஒன்றாக்கப்படும். இதற்குப் பதிலாக 100 முதல் 300 ரூபாய் வரை பணம் தருவதாக ஆசை வார்த்தை கூறப்படும்.

இத்தகைய பொருட்கள் எதுவித சுங்கப் பரிசோதனையுமின்றி வெளி வருவதற்கு இராமசாமி என்ற பியூனே காரணம். இவர் உதவி தாசில் தார் (அகதிகள் புனர்வாழ்வு) அலுவலகத்தைச் சேர்ந்தவராவர். பணிகளை விரைவில் முடிப்பதற்கு குடும்ப அட்டைகளை முற்கூட்டியே சேகரிப்பதாகக் கூறிக் கப்பலுக்குச் செல்லும் இவன் கள்ளக்கடத்தல் காரரோடு ஒப்பந்தம் செய்தபின் குறிப்பிட்ட பொருட்களை எவ்வித சுங்கப் பரிசோதனையுமின்றி வெளியில் கொண்டு வருவான். பின்னர் மண்டபம் முகாமில் கடத்தல் பொருட்கள் சுலபமாக மீளப்பெறப்படும்.

ஆனால் இதிலும் ஏமாற்றமே இவர்களுக்கு மிஞ்சுகிறது. ஆசையைத் தூண்டித் தருவதாகக் கூறப்பட்ட பணம் கிடைக்கவில்லை. இப்படியான வேலையால் இராமசாமி ஒவ்வொரு கப்பல் வருகையின் போதும் 1000/— ரூபாய் வரை சம்பாதிப்பதாகத் தெரிகிறது. இவனைவிட சுங்க அதிகாரிகளுக்கும் அகதிகள் பொன் தரும் பொருட்களே குறிப்பிட்ட அடையாளமிடப்பட்ட பெட்டிகளைத் தவிர ஏனையவை அசட்டையாகக் கவனிக்கப்படும். "அவை களவு போவதும், உடைவதும், சிதைவதும் மிகமிகச் சாதாரணம், பல சமயங்களில் பல பொருட்களும், பெட்டிகளும் உடைக்கப்பட்டு கடலுக்குள் வீசப்படுவதும் உண்டு. உதாரணத்திற்கு யூன் மாதத்தில் 10 குடை 10 பான்ட் துணி, டிரான்சிஸ்டர், சோப்புக் கட்டிகள் உட்பட ஏறத்தாழ 8000/— ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் P. மூக்கையா என்பவரின் பெட்டியிலிருந்து காணாமல் போயின.

இது பற்றி அகதிகளைப் பொறுப்பேற்கும் டெபுடி (Deputy) தாசில்தார் வேதநாயகம் கூறுவது என்ன? (1) தரையிறங்கியவுடன் சுவையான தேநீர் வழங்கப்படுகின்றது.(2) பின் சுவையான உணவு வழங்கப்படுகிறது. (3) சுங்க அதிகாரிகளும் இறுக்கமான பரிசோதனையின்றித் துணை புரிகின்றனர்.(4) பின்னர் இவர்கள் பொருட்கள் யாவும் கவனமாக வானில் (van) ஏற்றப்பட்டு மண்டபம் செல்லும் புகையிரதத்தில் விசேடமாக இணைக்கப்பட்ட தனியான பெட்டியில் ஏற்றப்படுகின்றது. வேதநாயகம் கூறுவது கேட்பதற்கு இனிமைபயக்கக்கூடும். ஆனால் நடைமுறையில்—

கொடுக்கும் தேநீர்கூட எல்லாருக்கும் கிடைப்பதில்லை. குளிர்ந்த சுவையற்ற தேநீர் 14 மணி நேரப் பசியுடன் காத்திருப்பவர்களுக்கு இது என்ன பயனை விளைக்கக்கூடும். அதுவும் பாதிப் பேருக்கு மேல் கிடைப்பதில்லை. சங்கப் பரிசீலனைகள் முடிய ஏறத்தாழ 9—10 மணி நேரங்கள் எடுக்கும். சிற்றுண்டிச்சாலை நிர்வாகிகளின் அசட்டைப் போக்கினாலோ அனுபவமின்மையாலோ தயாரிக்கப்படும் உணவு பாதிப்பேருக்குக் கூட போதுமானதாக இல்லை. உணவு கிடைக்கப் போகும் தறுவாயில் பலர், பிரயாணக் களைப்பினாலும் பசி மயக்கத்தினாலும் அயர்ந்து தூங்கி விடுகின்றனர். நள்ளிரவுக்குப் பின்னரே இரவுணவு கிடைக்கிறது. ஏறத்தாழ 40 மணி நேரப் பட்டினி அநேகமாக இந்த நேரத்தில் முடிவடையும்.

சுங்கப் பரிசோதனையின் போது விதிகள் எதுவும் தெரியாத, புரியாத இவர்களிடமிருந்து வரி தண்டம் என்ற போர்வையில் அதிகாரிகள் தாம் விரும்பிய பொருட்களைப் பிடுங்கிக் கொள்வதை தடுப்பார் யாருமில்லை. இப் பொருட்கள் இராமேசுவரத்தில் பகிரங்கமாகவே விற்கப் படுகின்றன.

இதன் பின்னர் விடியற் காலை 2 மணியளவில் இவர்களுக்கான ''விசேட பெட்டி'' வருகின்றது. 120 பயணிகளை மட்டும் கொள்ளத்தக்க இப் பெட்டி ஏறத்தாழ 500 பேரைச் சுமக்க வேண்டியுள்ளது. ராமேசுவரத்தில் பயணிகள் கம்பாட்மெண்டுகளுக்கு நிலவும் கடும் தட்டுப்பாடு என்பது அதிகாரிகள் அசிரத்தையுடன் கூறும் காரணம்.

ரெவன்யூ அதிகாரிகள், பொலிஸ் காவலர் சமயம் கிடைக்கும் போதெல்லாம் இளம் பெண்களை இம்சைப் படுத்த இங்கு நிலவும் இருட்டும், விளக்கற்ற கம்பாட்டு மெண்டுகளும்துணை நிற்கும்.

### ஆறுமுகம்

மே இரண்டாம் வாரமளவில் ஆறுமுகம் எனப்படும் ரெவன்யூ அதிகாரி இவ்வாறு வருபவர்களில் ஒருபெண்ணை மானபங்கப்படுத்த முற்படும் போது அவள் கணவனால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப் பட்டதனால், 500க்கும் மேற்பட்ட அகதிகள் கொந்தளிக்க, ஆறுமுகம் ரெயில்வே யாட்டுக்குள் (Railwayyard) தப்பியோடக் காவல் படையினர் பட்டன் பொல்லுகளின் உதவியுடன் இவர்களை அமைதியாக்கிய விந்தை நடந்தது. சமீபத்தில் இப்படியான செயல்களில் ஈடுபட்ட இரு காவலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதாக அறியக் கிடக்கின்றது.

இவ்வாறாக மண்டபம் செல்லும் பயணப்பெட்டி அதிகாலை 3 மணிக்கே நிரம்பி வழிந்தாலும், காலை 6.30 மணிக்குக் கிளம்பும் ரெயில் வண்டியில் 5.00 மணிக்கு இணைக்கப்படும். இப்படியாகஒருமணிநேரத்திற்கும் குறைவான பயணத்திற்காக இவர்கள் பல மணி நேரங்கள் அடைத்து வைக்கப் படுகின்றனர். சிறுவர்களும் முதியோரும் மயங்கி விழும் அளவுக்குப் பல தொல்லைகளுக்கு ஆட்படுகின்றனர்.

### இராமலிங்கம்

மண்டபம் முகாமில் இவர்களுக்குப் ''பெரு வரவேற்பு'' அளிக்கப் படுகிறது. இராமலிங்கமும் அவரது கு(தொ)ண்டர் பட்டாளமும், முகாம் காவலர்களும் கெக்கலித்துக் கூக்குரலிட்டு இவர்களைவரவேற்கின்றனர். இவர்களை இவ் விருந்தாளிகளுக்கு இட வசதி செய்து செய்து கொடுப்பர். இத்தகைய சாட்டிலும், சுகாதார, மருத்துவ காரணிகளைக் கூறியும் கன்னிகளை, இளசுகளைக் குடும்பத்திடமிருந்து பிரித்துத் தமது காமவெறிக்கு இரையாக்குகின்றனர்.

இத்தகைய காமச்சேட்டைகள் அமைதியாக அனுமதிக்கப் படுகின்றன. எதிர்ப்புகள் தோன்றினால் குடும்பக் காட்(Family Card), கடவுச் சீட்டு (Passport) என்பவற்றில் சிக்கல்களை ஏற்படுத்தி விடுமாம். ஏனெனில் இந்த மனிதர்களே அலுவலக நேரத்தில் பியூன்களாக இருக்கின்றனர். இத்தகைய மனிதாபிமானத்தை மறந்தவர்கள் ஏழையான ஏதிலிக் குடும்பத்தினரை மிரட்ட உனக்கு கடனோ, வேலையோ கிடைக்காது. உனது விபரங்கள் போதாது. நாம் தகுந்த ஏற்பாடுகள் செய்வோம் என்பன போன்ற வார்த்தைகளே போதுமானவை.எனவே அவர்கள் தாம் விரும்பும் காரியங்களைச் சுலபமாகச் சாதிக்கின்றனர்.

இப்படியும் விட்டுக் கொடுக்கத் துணியாத ஏதிலிக் குடும்பத்தினரின் அட்டைகள், கடவுச்சீட்டுக்கள் பறிமுதல் செய்யப்படும் அல்லது தடுத்து வைக்கப்படும். இதனால் முதற்படியாக இவர்கள் பட்டினி கிடக்க நேரிடும். இவ்வாறு தொல்லை கொடுக்கும் இரு காவலாளிகள் காளிதாசன், இராமச்சந்திரன் எனப்படுபவர்கள். ஏதிலிகள் தமது உரிமைகளைப் பெற கெஞ்சிக் கூத்தாட வேண்டி நேரிடுகிறது. பியூன்களுக்குப் பணிந்து இச்சகம் பேசும் அகதிகட்குக் கருணை காட்டப்படுகிறது.

கடன் வழங்கும் எழுத்தாளர்கள் வழங்கும் கடனில் கால்பகுதியையே லஞ்சமாகப் பெற்றுக் கொள்கின்றனர். அகதிகள் கூட்டுறவு வங்கியின் பேரில் வழங்கப்படும் இப்பணக் காசோலைகள் இலகுவில் மாற்ற முடியவில்லை. இவ் வங்கிக்கு அதிக கிளைகளும் இல்லை. அதேசமயம் ஏனைய வங்கிகள் அவதிப்படும் ஏதிலிகளின் தேவை கருதிச் செயல் படுவதும் இல்லை. இதனை வகையாகப் பயன் படுத்தும் தரகர்களுக்குத் தான் லாபம்.

மண்டபம் முகாமில் வழங்கப்படும் உணவை இவர்கள் வேறு வழியின்றி உண்ண வேண்டியவர்களாயுள்ளனர். இந்தஅரிசி மிக மோசமானது. எப்படி வேக வைத்தாலும் இப்பழுப்பு நிற அரிசி வேகாதது மட்டுமன்றி உண்போருக்கு வயிற்றுப்போக்கு, போன்ற நோய்களையும் கொண்டுவருகிறது.இராமநாதபுரத்தைச் சேர்ந்த கூட்டுறவு மையம் ஒன்றினால் வழங்கப் படுகிறது இத்தானியம். இதற்கும் மேல் செய்ய தமக்கு எதுவித அதிகாரமும் இல்லை எனக் கூறுகிறார் டெபுடி (Deputy ) தாசில்தார்காமல்.

7—ம் பக்கம் பார்க்க

# விளையாட்டுச் செய்திகள்

## சன சமூக நிலைய சமாஜ விளையாட்டுப் போட்டு

யாழ். மாநகர சனசமூக நிலைய சமாஜம் சனசமூக நிலையங்களுக்கிடையில் விளையாட்டுப்போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

உதைப்பந்தாட்டம் (15 வயதுக்குக்கீழ்), கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் (பெண்களா), தாச்சி, மரதன், சைக்கிள் ஓட்டம் உட்பட பல போட்டிகள் இந்த விளையாட்டுப் போட்டியில் நடைபெறவுள்ளன

இதற்கான விண்ணப்பங்கள் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல்வேண்டும்.

இதுபற்றிய மேலும் விபரங்களை சிவன்பண்ணை வீதியிலுள்ள அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாமென சமாஜ உப தலைவரும், விளையாட்டுக்குழுத் தலைவருமான ச. த. கணநாதன் அறிவித்துள்ளார்

## மாபெரும் உதை பந்தாட்டம் வடக்கும் - கிழக்கும் மோதும்

(விளையாட்டுத்துறை நிருபர்)

யாழ்ப்பாண உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு ஓர் அரிய விருந்து; பல வருடகால இடைவெளிக்கு பின், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கிடையே உதைபந்தாட்டப்போட்டியொன்று எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குருநகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் பி. ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இரு மாகாணங்களுக்குமிடையே நிலவிவரும் நட்புறவையும், ஒற்றுமையையும் இன்னும் பலப்படுத்தும் முகமாக, குருநகர் பாடுமீன் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இப்போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக A. B பிரிவு அணிகளை எதிர்த்து மட்டுநகர் பாடுமீன் கழக A, B பிரிவு அணிகள் மோதும்.

இவ்வைபவத்தில் யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. பாலசிங்கம் பிரதம அதிதியாகக்கலந்து கொள்ளுவார். (16)

## ஸ்ரீகாந் மீண்டும் அவுட்

யூன் மாதம் 30ம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ள இந்திய இங்கிலாந்து அணிகளுக் கிடையிலான கிரிக்கெற் போட்டித் தொடரில் ஆட முன்னை நாள் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் கிருஷ்ணமாச்சாரி சிறிகாந், மொஹிந்தர் அமர்நாத் ஆகிய இரு வீரர்களும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை அதேசமயம் வெங்ஸகர் அணியில்சேர்க்கப்பட்டுள்ளார் ஸ்ரீகாந் அணியில் இருந்து வெளியேற்றப்பட்டதை இந்திய பிரபல பதிரிகைகள் யாவும் வன்மையாக கண்டித்துள்ளன.

லண்டன் செல்லும் இந்திய அணியின் விபரம் அஸாருதீன் (தலைவர்) ரவிசாஸ்திரி (உபதலைவர்) என்.எஸ் சித்துடபிள்யூ வெங்கட்ராமன் சஞ்சய் மஞ்சரேகர் சச்சின் ரெண்டுல்கர் வெங்சாகர் கபில்தேவ் கிரான்மூர் மனோஜ் பிரபாகர் அதுல்வாசன் சஞ்சிவ்சர்மா வெங்கடபதிராஜி கிர்வானி நயன் பொன்கியா அனில் கம்பிள்.(16)

## சான்றிதழ் வழங்கப்பட்டது



1989 ம் ஆண்டு, ஸ்ரீலங்கா உதைப்பந்தாட்ட சங்கமும் ஸ்ரீலங்கா உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கமும் இணைந்து. தேசிய ரீதியில் நடத்திய உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு, அண்மையில் யாழ் சென்ஜோண்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன:

படத்தில்: இவ்வைபவத்திற்கு தலைமை தாங்கிய முன்னைநாள், பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர். கனகலிங்கம் சித்தியடைந்த மத்தியஸ்தர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குகிறார்; நடுவில் நிற்பவர் யாழ் உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்க காரியதரிசி எஸ் கிளிபேட் அந்தனிப்பிள்ளை (படம்—கப்ரின் D.A.M குணசிங்கம்)

## உதைப்ந்தாட்டச் சுற்றுப் போட்டி

உரும்பிராய் மேற்கு திருக்குமரன் சனசமூக நிலையமும் விளையாட்டுகழகமும் இணைந்து விக்னேஸ்வரன் ஞாபகார்த்த ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியைச் நடாத்த உள்ளன இதில் பங்குபற்ற விரும்பும் ஏனைய கழகங்கள் செயலாளர் திருக்குமரன் சனசமூக நிலையம் உரும்பிராய் மேற்கு உரும்பிராய் என்ற முகவரிக்கு இம்மாதம் 31ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

### கப்பல் சேவை

# இலங்கை தயார்; இந்திய தூதரக அனுமதியே தேவை

இலங்கை—இந்திய கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் அனுமதி எதிர்பார்க்கப்படுகின்றது.

இச்சேவையை ஆரம்பிப்பதற்கு இராமேஸ்வரம் துறைமுகத்தைத் தயார்ப்படுத்த நாற்பத்தெட்டு மணி நேரம் போதுமானதென இந்தியக் கப்பல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதிகரித்த பிரயாணிகள், பொதிகள் போக்குவரத்துக்கு 'இராமானுஜம்' கப்பல் போதுமானதல்ல என்பதே ஒரேயொரு பிரச்சனை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்கம் இக்கப்பல் சேவையை நடத்தத் தயாராக உள்ளது.

மேற்படி தகவல்களை 'இந்து' பத்திரிகை வெளியிட்டுள்ளது:

## வீதித் திருத்தம் என்ற பெயரில்...

(வட்டுக்கோட்டை)

வீதித்திருத்தம் என்ற பெயரில் சுழிபுரம் பறாளாய் வீதியில் கிறசர் மக்கியைப்பரவி போக்குவரத்திற்கு மேலும் இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குன்றும் குழியுமாக காணப்பட்ட இந்த வீதியை செப்பனிட்டு பல ஆண்டுகள் கடந்து விட்டன. எதிர் வரும் மே 28 ஆந் திகதி பறாளாய் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகின்றது.

ஏராளமான முருகன் அடியார்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து கூடும் இவ் உற்சவத்திற்கு வீதித் திருத்தம் அவசியமாக எதிர்பார்க்கப்பட்ட வேளையில் கடும் வரட்சி நிலவும் இந்த பருவத்தில் இவ்வாறு தார் பாவிக்காமல் வெறும் கிறசர் மணலால் வீதியின் நிலையை மேலும் கெடுத்துள்ளது குறித்து இப்பகுதி மக்கள் பெரும் விசனம் தெரிவித்துள்ளார்கள். (34)

## சீனாவில் விமான விபத்துகள் 1989ல் மட்டும் 2000 பேர் பலி

சீனாவில் ஐந்து நாளைக்கு ஒரு விபத்து என்ற அடிப்படையில் விமான விபத்துக்கள் இடம் பெறுகின்றன என சஞ்சிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும்70 விமான விபத்துக்கள் சீனாவில் இடம் பெற்ற தென்றும் அதில் இரண்டாயிரம் பேருக்கு அதிகமானோர் உயிர் இழந்ததாகவும் கூறப்படுகின்றது, சீனாவில் உள்ள இராணுவ விமானம் உட்பட ஏனையவையும் மிகப் பழைமை வாய்ந்த காரணத்தாலே இவை அதிகவிளல்விபத்துக்குள்னாகின்றன:

### பண்பாட்டுப் பின்னணி

## ஆசிரியர் வழி நடத்தலில் 'மாயாசக்தி' எனும் அமைப்பு

'மாயா சக்தி' என்ற பெயரில் நாடகப் பயிற்சிப் பட்டறை ஒன்று கொழும்பில் அமைக்கப்பட்டுள்ளது.

இன,மத மொழி பேதமற்ற முறையில் பல்வேறு பண்பாட்டுப்பின்னணிகளைக் கொண்ட ஆசிரியர்களால் இப் பட்டறை வழி நடத்தப்படும்.

இந்த நாட்டின் நாடகக் கலைஞர்களின் நாடகத்துறை பற்றிய அறிவையும் அநுபவத்தையும் அபிவிருத்தியடையச்செய்யவே இதுதொடங்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வெவ்வேறு பண்பாடுகளைக் கொண்டு வாழும் இலங்கையரிடையே வெவ்வேறு பண்பாட்டினங்களின் மூலங்களைக் கண்டுபிடித்து நாடகத்தினூடாக ஒரு பொதுவான பண்பாட்டை வெளிப்படுத்தல்,

வெளிநாடுகளிலிருந்து வரும் கலை நிபுணர்களுடைய அறிவையும், அனுபவத்தையும் பகிர்ந்து ஒரு கலைப் பரிமாற்றத்தை உருவாக்குதல்,

பயிற்சிக் கூடங்கள் மூலமாகவும், அரங்கேற்றங்கள் மூலமாகவும் இத் தீவில் உள்ள சகல பகுதிகளிலுமுள்ள கலைத்துவத்தை மேம்படுத்தல் என்பன இதன் நோக்கங்களாகும்.

ஜேர்மனியைச் சேர்ந்த நாடக நிபுணர்களாலும், இலங்கை நாடகக் கலைஞர்களாலும் ஆரம்பிக்கப்படும். மேற்படி பயிற்சிக் கூடத்தில் சேரும் பயிலுநர்களுக்கு இரு வருடங்கள் பயிற்சியளிக்கப்படும்.

இதில் பங்குபெற விரும்பும் ஆர்வலர்கள் செல்வி மானல் ஜாகொட, இல.20 இரண்டாம்தெரு, தெகிவளை என்ற முகவரிக்கு சொந்த முகவரியிட்ட, முத்திரையொட்டிய கடித உறையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

### யாழ் - கல்முனை

## இரவு நேர பஸ் சேவை விரைவில் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்-கல்முனை இரவு இ.போ.ச.பஸ் சேவை விரைவில் நடாத்தப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை கிழக்கு பிராந்திய போக்குவரத்து சபையும்,வடபிராந்திய போக்கு வரத்து சபையும் மேற்கொண்டுள்ளன என கிழக்கு பிராந்திய போக்குவரத்துச் சபைஅதிகாரி ஒருவர் முரசொலிக்கு தெரிவித்தார்.

யாழ்-மட்டக்களப்பு பயணிகளின் நன்மை கருதி கடந்த மாதம் கிழக்கு பிராந்திய போக்கு வரத்துசபை இரவு பஸ் சேவையை ஆரம்பித்த போதிலும் வடபிராந்திய போக்கு வரத்துச்சபைஅதற்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்ததினால் இச்சேவை இரண்டொரு தினங்களில் நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (05)

### அடேங்கப்பா . . .

## சாராயக் கலப்படமா? இனி அபராதம் 50 லட்சம்

சட்டவிரோதமான முறையில் மதுசாரங்களை உற்பத்தி செய்தல் மதுபானம் தயாரித்தல், அவற்றை வைத்திருத்தல், கொண்டு செல்லுதல் மற்றும் விற்பனை செயதல் ஆகிய குற்றங்களுக்கான அபராதம் 1000 ரூபாவிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படும்.

இது தொடர்பான கலால் கட்டளைகள் சட்ட விதிகளில் மாற்றம் கொண்டு வரப்படும்.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற ஆளும்கட்சி பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்க இதனைத் தெரிவித்தார்.

சாராயத்தில் கலப்படம் செய்பவர்களுக்கு 50 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும்.

இப்போது இக்குற்றச் செயலுக்கு 1000 மாத்திரமே அபராதம் விதிக்கப்படுகின்றன

கலால் திணைக்கள அதிகாரிகளின் உத்தரவை மீறி வாகனங்களை நிறுத்தாமல் செல்லும் சாரதிகளுக்கான அபராதத் தொகை ஐம்பது ரூபாவிலிருந்து ஐயாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும்.

இவ்வாறு செய்வதன் மூலம் நாட்டில் குற்றச்செயல்களைக் குறைக்க முடியும் என்று பிரதமர் சொன்னார்.

## பல்கலைக்கழகங்களில் மீண்டும் மாணவர் அமைப்பு

சகல பல்கலைக்கழகங்களிலும் எதிர்வரும் ஜூலை மாதம் தொடக்கம் மாணவர் அமைப்புக்கள் மீண்டும் அமைக்கப்படவுள்ளன.

கொழும்பு, களனி ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, மொரட்டுவை, றுகுணு, பேராதனை ஆகிய பல்கலைக்கழகங்களில் தான் இவை நிறுவப்படும்.

ஐந்து ஆண்டுகால இடைவெளியின் பின்னர் இந்த அமைப்புக்களை மீண்டும் அமைக்க பல்கலைக்கழக நிர்வாகங்கள்முடிவுசெய்துள்ளன.

## சிற்றூரவை

(கீரிமலை)

மாவிட்டபுரம் வீமன்காமம் கீரிமலை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் சிற்றூரவைக்காக கூட்டம் நடைபெற்றது. ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலிருந்தும் தலா ஏழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

## விடுதலைப்புலிகள் துரித முயற்சி

# தியாகி சிவகுமாரனுக்கு உரும்பராயில் புதிதாக சிலை

தியாகி சிவகுமாரனுக்குப் புதிய சிலை ஒன்றை அமைக்கும் முயற்சியில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் துரிதமாக ஈடுபட்டுள்ளனர்.

உருக்குலைந்து கிடக்கும் பழைய சிலை அப்படியே இருக்க புதிதாகத் தாம் சிலை ஒன்றை அமைக்கப் போவதாகப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இச்சிலை ஸ்ரீலங்கா இராணுவத்தின் வெறியாட்டத்தால் உடைத்து உருக்குலைக்கப்பட்டது.

புதியசிலை அமைப்பது தொடர்பாக உரும்பராய் சனசமூக நிலையங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களின் ஆலோசனை புலிகளால் பெறப்பட்டுள்ளது.


பிரதிநிதிகளும் சிரமதான அடிப்படையில் தம்மாலான உதவிகளைச் செய்வதாகத் தெரிவித்தனர்.

அடுத்தமாதம் 5-ம் திகதிக்கு முன்னதாக இச்சிலையை அமைப்பதில் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

உடும்பராயில் சந்தை ஒன்றை அமைத்துத் தருமாறு பிரதிநிதிகள் விடுத்த வேண்டுகோளுக்கும் புலிகள் இணக்கம் தெரிவித்தனர்.

★ டாக்குத்தர் ஐயா ஒப்பரேசனுக்குப் பிறகு என்ர உடம்பில தழும்பு ஏதும் இருக்குமோ?

★ ஒப்பரேசனுக்குப் பிறகு நீர்தான் உயிருடன் இருக்கமாட்டீரே ... பிறகு ஏன் அதைப்பற்றி வீணாய்க் கவலைப்படுகிறீர்?



## மெய்கண்டான் வெற்றி

''மைலோ'' வெற்றிக் கிண்ணத்திற்கான அகில இலங்கை ரீதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஓர் நிகழ்வாக கடந்த திங்கட்கிழமை மாலைஉரும்பிராய் இந்துக்கல்லூரியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் மோதியது.

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய ''ஏழூர் விளையாட்டரங்கில்'' நடந்த இப்போட்டியில் 0—5 கோல்களால் அமோக வெற்றியை இளவாலை மெய்கண்டான் பெற்றுக் கொண்டது. (25)

# வைப்பிலிடச் சென்ற பணம் வங்கியில மாயமாய் மறைந்தது

வங்கிக்கு வைப்புச் செய்வதற்காகக் கொண்டு செல்லப்பட்டபணம் 25,000 ரூபாவையும் இழந்த நபரொருவர்தாங்கொணாக்கவலையுடன் வீடு திரும்பிய பரிதாபகர சம்பவமொன்று பருத்தித்துறையில் நிகழ்ந்துள்ளது.

கடந்த 11-ம் திகதி தும்பளையைச் சேர்ந்த கே.சின்னத்தம்பி என்பவர் 25,000 ரூபாவை இலங்கைவங்கி பருத்தித்துறைக்கிளையில் வைப்புச் செய்வதற்காகக் கொண்டு சென்றுள்ளார். அங்கு வங்கியின்வெளிமேசையில்பணத்தை வைத்து விட்டு படிவத்தை நிரப்பிய பின் பணத்தை பார்த்தபோது பணம்காணாமல் போய்விட்டதனால் அதிர்ச்சியடைந்தார் பலதேடுதல் முயற்சிகள் மேற்கொண்டும் எதுவிதபலனுய் கிடைக்கவில்லை. (15

## சிலாபத்திலிருந்து

# பளை சாரணர் குழுவினரின் சைக்கிள் யாத்திரை ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்ட சாரணர் குழுவும், பளை மகாவித்தியாலய சாரணர் குழுவும் இணைந்து ஆரம்பித்த சமாதான ஊர்வலம் மீண்டும் இம்மாதம் 16—ம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளது.

16—ம் திகதி காலை 7.30 மணியளவில் ரயில், பஸ் மூலம் பளையிலிருந்து இவர்கள் சிலாபம் சென்றடைந்தனர்.

17—ம் திகதி காலை சிலாபத்திலிருந்து நீர்கொழும்பை சென்றடைந்த இவர்கள் 18-ம் திகதி ஜாஎலயை சென்றடைந்து பின்னர் 19—ம் திகதி கொழும்பு போய்ச் சேர்வார்கள்.

அன்றிரவுசாரணர்தலைமை அலுவலகத்தில் தங்கியிருக்கும் இவர்கள் 20—ம் திகதி லேக் ஹவுஸ், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி, வீரகேசரி ஆகிய இடங்களுக்குச் சென்று சமாதான செய்திகளை சேகரிப்பார்கள்.

21—ம் திகதி சிரேஷ்ட ஆணையாளர் றோ. லயனல் சில்வா உட்பட ஏனைய சாரண அதிகாரிகளை சந்தித்து, சிரேஷ்ட ஆணையாளரிடம் சமாதானச் செய்திகளை கையளிப்பார்கள்.

கடந்த மாதம் ஒன்பதாம் திகதி ஆரம்பித்த இவர்களது சமாதான ஊர்வலம் இக்குழு ஆசிரியர் நற்குணத்தின் விபத்து மரணத்தால் சிலாபத்தில் தடைப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# முரசொலி சைக்கிளோட்டம், போட்டியாளர் விபரம்

புதுக்குளம் சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகம் 'முரசொலி' ஆதரவுடன் நடாத்தும் 115 மைல் சைக்கிளோட்டப் போட்டியில் கலந்து கொள்ள மேலும் பலர் விண்ணப்பித்துள்ளனர்.

இந்த சைக்கிளோட்டப் போட்டியில் கலந்து கொள்ள மேலும் பலர் ஆர்வம் காட்டுவதனால் விண்ணப்ப முடிவு திகதிஇன்று 18-ம்திகதியாலை ஆறு மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 10 திகதிவரை கிடைக்கப்பட்ட விண்ணப்பங்களின் விபரம் வருமாறு

கதிரவேலு சம்புலிங்கம் சாவகச்சேரி, கோ.தங்கராசா சின்னப்புதுக்குளம் மல்லி ராசேந்திரம் கைதடி, அப்புசாமி ரட்ணஸ்ரீ பண்டார, நெடுங்குளம் பஞ்சாட்சரம் சுகுமார்சாவகச்சேரி, ஐங்கரன் சோமசுந்தரம்கைதடி, முருகுப்பிள்ளை பிரபாகரன் யாழ்ப்பாணம், நாராயணசாமி இராஜேந்திரன் வவுனியா, சாமி மாசிலாமணி முல்லைத்தீவு, சச்சிதானந்தம் சிவகுமார் பரந்தன், கோபால் நாராயணசாமி கோவில் புதுக்குளம், சின்னத்தம்பி ஆறுமுகம் (சிவராசா) கோவில் புதுக்குளம், வி.சுமதிபாலா வவுனியா எஸ். பி. செல்வராசா வவுனியா, எஸ். எம் றபீக் இராசா இலுப்பைக்குளம், அந்தோனிப்பிள்ளை தேவன் அலம்பில், கே.கனகராஜ் அலம்பில், சூசைப்பிள்ளை ஜெயரட்ணம் அலம்பில், கே. சிவனேஸ்வரன் செம்மலை அலம்பில். தேவசகாயம் பாக்கியநாதன் வவுனியா, குமாரசாமி ஆனந்தன் வாரிக்குட்டியூர், கார்த்திகேசு நாகேந்திரன் புங்குடுதீவு, தாமு குணசேகரம் சாவகச்சேரி, பிலிப் பெஞ்சமின் வவுனியா, இராசதுரை கேதீஸ்குமார் 5 ஆம் யூனிட் வாரிக்குட்டியூர், சின்னையா குமாரகுலசிங்கம் வாரிக்குட்டியூர், சிவலிங்கம் சாமிஐயா வாரிக்குட்டியூர் சாமி ஐயா ரவிக்குமார் வாரிக்குட்டியூர் கவுரிப்பிள்ளை யேசுதாசன் சாவகச்சேரி, துரை மகாலிங்கம் கொக்குவில் சிவபாதம்சிற் பவானந்தன் அளவெட்டி, பொன்னப்பு குணலிங்கம் வவுனிக்குளம். ந. முன்னைநாதன் பேயாடி கூழாங்குளம் ஆர். இராமகிருஷ்ணன் வவுனியா, கே. எஸ் பி. உலகநாதன் வாரிக்குட்டியூர், அ. தங்கதுரை முல்லைத்தீவு ஆர். அலோசியஸ்—முல்லைத்தீவு, குலசேகரம் நாகேந்திரன்—செல்வபுரம், நா. துரைசிங்கம்—புத்தூர், க. சின்னத்தம்பி—புத்தூர், இ. இரத்தினம்—புத்தூர், கறுப்பையா செல்வம்— முள்ளியவளை முத்து சிவனொளி— முள்ளியவளை, இராமசாமி கதிரவேலு— உக்கிளான்குளம், சகாதேவன் நித்தியானந்தன் —பண்ணாகம், செ. சிவானந்தராஜா—ஆனையிறவு, வை. கைலைநாதன் அளவெட்டி

அலித்தம்பி அப்துல் ரசாக் —இலுப்பைக்குளம், அ. தேவேஸ்வரன் — கனகராயன் குளம், பெரியையா— ஆறுமுகம் வவுனியா, சீ. பி. வரதராஜன்— கோப்பாய், செ. குணரத்தினம்— புத்தூர், மா. தேவராசா இயக்கச்சி

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

(நாயன்மார்கட்டு)

யாழ் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய க. சீவரத்தினம் வடக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்துக்குக் கிராம அபிவிருத்தி உதவியாளராகப் பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (33)

# செய்தி மஞ்சரி

## 22இல் அஞ்சல் விடுமுறை

தேசிய வீரர்கள் தினமான மே 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அஞ்சல் அலுவலக விடுமுறை தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இந்நாளில் ஞாயிற்றுக்கிழமை போன்றே சகல அஞ்சல் அலுவலங்களிலும் அலுவல்கள் நடைபெறும்.

## முள்ளிக்குளத்தில்

வீர வேங்கை லெப்டினன்ட் கேர்ணல் ராதா அவர்களின் நினைவஞ்சலியும் முள்ளிக்குளத்தில் வீரமரணமடைந்த 11 வீர வேங்கைகளினதும் முதலாம் வருடநினைவு தினமும் எதிர் வரும் 19 ஆம் திகதி முதல் 20 திகதி வரை முள்ளிக்குளம் லெப்.கேர்ணல் ராதா விளையாட்டரங்கில் நடைபெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மன்னார் மாவட்டத் தனபதி கௌரவ விருந்தினராக கலந்து கொள்வார்.

## சபாநாயகர் தடை

பம்படித்தல், தக்கடியா முதலிய சொற்கள் உபயோகிப்பதற்கு தடையான சொற்கள் அல்லாதபோதிலும் அவற்றை பாராளுமன்றத்தில் உபயோகிக்கக் கூடாது என சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச் முகமது தடை விதித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து எழும்பிய கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன பதில் அளிக்கும்போது அமைச்சருக்கும், சுகந்திரக்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்கு வாதத்தின் போதே மேற்கூறப்பட்ட வார்த்தைப் பிரயோகங்கள் இடம் பெற்றன.

இச்சொற்களை பாராளுமன்றத்தில் பேசமுடியுமா என்பது குறித்து பெரும் சர்ச்சையே ஏற்பட்டது.

## மின்சாரசபை பொறுப்பில்

மின் விநியோகத்தைச் சரியான முறையில் கையாளத் தவறிய 400 உள்ளூராட்சி சபைகளின் மின் விநியோகக் கடமைகளை இலங்கை மின்சார சபை பொறுப்பு ஏற்கவிருக்கிறது.

மின் நிலுவைகளை செலுத்த தவறிய உள்ளூராட்சிச் சபைகளிடமிருந்து மின் விநியோகப் பணிகளை அடுத்த சில ஆண்டுகளில் இலங்கை மின்சார சபை ஏற்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடத்தல் முயற்சி தோல்வி

மூவாயிரம் கைக் கடிகாரங்களைத் தொலைக் காட்சிப் பெட்டி ஒன்றுக்குள் வைத்து கடத்த முயன்ற இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

மத்திய கிழக்கில் வேலை பார்த்து விட்டு இலங்கை திரும்பிய மேற்படி நபர் கடிகாரங்களை இலங்கைக்குக் கடந்த முயன்ற போதே சிக்கினர்.

இக் கள்ளக் கடத்தல் பற்றிய விசாரணைகள் தொடர்ந்து நடை பெறுகின்றன.

## உலக உயிர் பாதுகாப்பு

அக்டோபர் மாதம் 14-ஆம் 15 ஆம் திகதிகளை உலக உயிர் பாதுகாப்பு வாரமாக அனுஷ்டிக்கும் படி உலக மக்களுக்கு அறிவிக்குமாறு யாழ். இந்து இளைஞர் பேரவை ஐக்கிய நாடுகள் சபையையும் அதனுடன் இணைந்த உலக நிறுவனங்களையும் கோரியுள்ளது.

இத் தினங்களில் மக்களை மாமிச உணவைத் தவிர்த்து தாவர உணவை உண்ணும் படி இப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## புலிகள் நடவடிக்கை

பூவரசங்குளம் குருக்களூர் பகுதியில் கொள்ளையர் நடமாட்டம் இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து விடுதலைப் புலிகளால் அப்பகுதியில் தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விடுதலைப்புலிகளைக் கண்டதும் கொள்ளையர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பி ஓடி விட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பூவரசங்குளம் பகுதியில் அடிக்கடி நடைபெறும் வாகனக் கொள்ளைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

## பனை ஓலை பயன்பாடு

தேயிலைப் பொட்டலங்களைப் பனை ஓலையால் செய்யப் பட்ட பெட்டி போன்றவற்றில் வைத்து ஏற்றுமதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்தகைய பெட்டிகளைப் பெறுவதற்குக் கொழும்பு நிறுவனம் ஒன்று பனை அபிவிருத்திச் சபைக்கு ஓடர் வழங்கியுள்ளது.

இதே போன்று பிராந்தி போத்தலின் கழுத்துப் பகுதியை மூடும் மூடிகளையும் பனை ஓலையில் இருந்து தயாரிக்கப் பனை அபிவிருத்திச் சபையிடம் கேள்விகள் கோரப் பட்டுள்ளன.

திருமலை மாவட்ட

# எழுத்தாளர் ஆக்கங்கள் நூல் வடிவம் பெற வேண்டும்

''திருகோணமலை மாவட்டத்தில் உள்ள எழுத்தாளர்களின் ஆக்கங்களை வெளியிடுவதற்கான முயற்சிகளை இக்காலகட்டத்தில் மேற்கொள்ளுதல் அத்தியாவசியமானதாகும்''.

இவ்வாறு தா. பி. சுப்பிரமணியம் எழுதிய 'கோயிலும் சுனையும்' நாடக நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய சட்டத்தரணி ஓ. எல். எம். இஸ்மாயில் கூறினார்.

திரு. க. தவராஜ் தலைமையில் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் இந் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஜனாப் இஸ்மாயில் மேலும் பேசுகையில்; ''நூலாசிரியர் படிப்பினை மிக்கதும் வரலாற்றுச் சிறப்புமிக்கதுமான பல நாடகங்களை இந்நூல் பிரதி மூலம் வெளிக்கொணர்ந்துள்ளார். இம்முயற்சி வரவேற்கத்தக்கதும் பாராட்டுக்குரியதுமாகும்.

''இதேவேளை இந்நாடகக் கலை ஆர்வமிக்கோர் மேடையேற்றுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வது அவசியமானதாகும்'' என்றார்.

திருமலை சுந்தர் பேசுகையில்; ''காலத்தின் அவசியம் கருதிய சிந்தனைக்கும் சிறப்புக்கும் உரியதான நாடக நூல் பிரதியை எழுத்தாளர் வெளியிட்டுள்ளார். இம்முயற்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க வேண்டியது வாசகர் கடமையாகும்'' என்றார்.

அருட்திரு பத்மராஜா அடிகளார் இந்நூலின் முதலாவது பிரதியை நூலாசிரியரிடமிருந்து சம்பிரதாயபூர்வமாகப் பெற்றுக்கொண்டார்.

# இப்பகுதிகளின் மின் விநியோகம் இனிமேல் மின்சார சபையிடம்

யாழ்ப்பாணம், மாநகர சபை, பருத்தித்துறை நகர சபை, கொக்குவில், நெல்லியடி பிரதேச சபைகளுக்கான மின்சார விநியோகத்தை மின்சாரசபை விரைவில் பொறுப்பேற்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இச்சபைகள் இலங்கை மின்சாரசபைக்கு செலுத்தவேண்டிய நிலுவைள் இன்னும் செலுத்தப் படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடுத்துறைப் பகுதி

# பாடசாலைகள் நிலைமை அதிகாரி நேரில் அறிந்தார்

(தாளையடி)

வடமராட்சி கிழக்கில் உடுத்துறைக் கொத்தணி அமைப்பின் கீழுள்ள ஒன்பது பாடசாலைகளுக்கும் அண்மையில் விஜயம் செய்த வடமராட்சி கோட்டக்கல்வி அதிகாரி திரு பொ.வீரபத்திரன் பாடசாலை அதிபர்களைச் சந்தித்து முதலாம் தவணையின் போது பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பாடப்புத்தக விபரங்களையும் இன்னும் மாணவர்களுக்குத் தேவையான பாடப் புத்தகவிபரங்களையும் கேட்டறிந்தார்.

கட்டைக்காடு றோ.க.த.க பாடசாலைக்கு கோட்டக் கல்வி அதிகாரி அவர்கள் விஜயம் செய்தபோது அவரைச் சந்தித்த பெற்றோரும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் மேற்குறிப்பிட்ட பாடசாலையில் ஆண்டு ஒன்பது வைப்பதற்கு அனுமதிவழங்குமாறுவேண்டுகோள் விடுத்தனர்.

ஐ.ஜி.பி உத்தரவு

# நாடு முழுவதும் மீண்டும் வீதி ரோந்துச் சேவை

நாடு முழுவதும் மீண்டும் பொலிஸார் வீதிகளில் ரோந்து செல்லும் சேவையை ஆரம்பிக்குமாறு பொலிஸ் மா அதிபர் சகல மாவட்டங்களுக்கும் பொறுப்பான சகல பொலிஸ் அதிபர்களையும் பணித்துள்ளார்.

தீவிரவாத நடவடிக்கைகளினால் தற்காலிகமாக நிறுத்தப் பட்டிருந்த இந்த நெடுஞ்சாலை ரோந்துச்சேவை தற்போது சீரடைந்துள்ள நிலைமையைக் கருத்திற் கொண்டு மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அண்மைக் காலமாகநெடுஞ்சாலைகளில்வழிப்பறிக்கொள்ளைகள், வாகனக்கடத்தல்கள் போன்றவை மேற்கொள்ளப் பட்டு வருவதை அடுத்தே நெடுஞ்சாலைரோந்துச்சேவை மேற்கொள்ளப்பட விருக்கின்றன என மேலும் தெரிவிக்கப் மட்டுள்ளது.

## சுவையான செய்திகள்

### காதலி தரும் தெம்பு

மாவீரன் நெப்போலியன் இருபது முப்பது நாட்கள் போர்க்களத்திலிருந்தாலும் எப்போதும் சோர்வின்றிக் காணப்படுவார். செயற்படுவார்.

போர்த்திட்டம் பற்றிய குறிப்புக்கள் கூட அவரிடம் இருக்காது. எல்லாம் மனக்கணக்குத்தான் ஆனால், சட்டைப் பாக்கெட்டில் இரண்டு மூன்று கடிதங்கள் எப்போதும் அவரிடம் இருக்கும். அவற்றைத்தான் அவர் அடிக்கடி எடுத்துப் படித்து உற்சாகப் படுத்திக் கொள்வார். அவை தன் காதலி ஜோசப்பின் அவருக்கு எழுதிய காதல் கடிதங்கள்!

### நட்சத்திர மீன்போல நாமும்...

நட்சத்திர மீன் என்று ஒருவகை மீன் இனம் இருக்கின்றது. இந்த இனத்து மீன்களில் எந்தப் பகுதியாவது நீருக்குள் இருக்கும் போதே துண்டாகி விட்டாலும் அந் துண்டான பகுதி வளர்ந்து இன்னொரு நட்சத்திர மீனாகி விடும். முதலில் துண்டிக்கப்பட்ட அந்தநட்சத்திரமீனின் பகுதியும் வளர்ந்து முழுநட்சத்திரமீனாகி விடும். ஒன்று பலவாகி அவையும் பலப்பலவாகி விடும் ஒரு விசித்திர வகை இந்த நட்சத்திர மீன்.

### ஒரு ஊர் அசைகிறது

அவுஸ்திரேலியாவில் உள்ளமவவாசல்தலமான 'கிராஸ் மீன்' அசைந்து கொண்டே இருக்கின்றது. இந்த இடம் 1,000 அடி கனமான உப்புப் படுக்கையின்மீது கனமான 'பாறைகளைக் கொண்டு அமைந்திருக்கின்றது.

உப்புப் படுக்கையினால் பாறைகளும் அதன் மேல் உள்ள ஊரும் நகர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் இன்று வரை இந்த ஊர்மக்கள் எவ்வித ஆபத்தையும் சந்திக்கவில்லை.

### நல்ல நடவடிக்கை

பிரயாணிகளினதும், பொது மக்களினதும் நலன் கருதி யாழ் தபால் திணைக்கள அதிகாரிகளினால் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் புதிதாகத் தபால் பெட்டியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் யாழ். பஸ் நிலையத்தில் தபால் பெட்டி ஒன்று இல்லாதது பெருங் குறையாக இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது பழுதடைந்திருக்கும் தபால் பெட்டிகளும் துரிதமாகப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (33)

### அனுதாபம்

யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளரும், சமூக சேவையாளருமான திரு. செ. வரதலிங்கம் மறைவுக்கு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் அனுதாபம் தெரிவித்து அஞ்சலி செலுத்தியுள்ளது.

மறைந்த வரதலிங்கம் ஓய்வு பெற்ற வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபராவார். கடந்த சனிக்கிழமை இரவு வேலணையில் நிகழ்ந்த லொறி மோட்டார் சைக்கிள் விபத்தில் இவர் மரணமானார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சாரணர் வைபவம் ஒன்றில் கலத்து விட்டுத் திரும்புகையில் இவ்விபத்தில் சிக்கி மரண மாணமானார் என்பது குறிப்பிடத்தக்கது

(36)

## முரசொலிக்கு வந்த கடிதம்

# பல்கலைக்கழக கல்வி ஆண்டு விரைவில் ஆரம்பிக்கப்படுமா?

ஆசிரியர்
முரசொலி

தற்பொழுது யாழ். பல்கலைக்கழகத்தின் பரீட்சைகள் யாவும் முடிவடையும் நிலையில் உள்ளன. ஆனால் புதிய கல்வி ஆண்டு ஆனது ஆரம்பமாக மூன்று நான்கு மாதங்களாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ் பல்கலைக்கழகமானது மிகவும் பிரச்சனையான காலங்களில் மூடுப்படாமல் தொடர்ச்சியாக இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. உபவேந்தர், பேராசிரியர், விரிவுரையாளர்கள் ஊழியர்களின் திறமையாலேயே பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் பல்கலைக்கழகம் இயங்கியது.

தற்பொழுது நாட்டு நிலைமை மிகவும் சீராக இருக்கும் காலத்தில் பல்கலைக்கழகம் மூடப்பட்டு மாணவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாமல் இருப்பது மன வேதனைக்கு உரிய விடயமாகும். ஏனெனில் மாணவர்கள் தமது பல்கலைக்கழகக் கல்வியை எவ்வளவு விரைவில் முடிக்கலாமோ அவ்வளவு விரைவில் முடிக்கவே விரும்புகின்றார்கள்.

புதிய மாணவர்களின் அனுமதியே இத்தாமதத்துக்கு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது. எனவே இது தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம், பல். மானிய ஆணைக்குழு போன்றவற்றுடன் தொடர்பு கொண்டு விரைவாக புதிய கல்வி ஆண்டு ஆரம்பமாவதற்கு உதவுவார்களா?

கொக்குவில் எஸ். சுசீலா

# சீவல் தொழிலாளர்களுக்கு உற்பத்திநிவாரணம் இல்லையா?

ஆசிரியர்
முரசொலி

உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடை பண்டத்தரிப்பு உட்பட பலபகுதிகளில் உள்ள சீவல் தொழிலாளிகளுக்கு வழங்கப்படவில்லை.

நிவாரணம் பெறுவது சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டோம். கிராம சேவையாளரின் மூலமும் தொடர்பு கொண்டு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன ஆனால் அதற்குரிய பதில் இதுவரையில் கிடைக்கவில்லை.

பண்டத்தரிப்பு பகுதியில் எந்த ஒரு சீவல்தொழிலாளிக்கும் இந்த நிவாரண உதவி கிடைக்கவில்லை. இதனால் விரக்தியும் வேதனையும் அடைந்து வருகின்றோம்.

கிராமசேவையாளரிடமும் உதவி அரசாங்க அதிபரிடமும் இது சம்பந்தமாக விசாரித்தபோது,

தாம் இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுத்ததாக கூறிய போதும் எவ்வித பலனும் எமக்கு கிடைக்கவில்லை

இதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் உடன்எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

யோ செபஸ்ரியாம்பிள்ளை
முன்னாள் தலைவர், (பண்டத்தரிப்பு பரிஸ் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவு சங்கம்.)

தமிழ் அதிகாரி தலைமையில்

# இலங்கை பொலிஸ குழு சிங்கப்பூர் செல்கின்றது

இலங்கை பொலிஸ்கோஷ்டியொன்று சிங்கப்பூரில் போக்குவரத்து சம்பந்தமான விசேட பயிற்சியைப்பெற்றுக்கொள்ள சிங்கப்பூர் செல்லவுள்ளது.

போக்குவரத்து வீதி ஒழுங்குகளை மிகத்திறமையாக மேற்கொள்ளு முகமாகவே பாதுகாப்பு அமைச்சு இக்கோஷ்டியை சிங்கப்பூருக்கு அனுப்புகின்றது.

சிங்கப்பூருக்குச் செல்லும் இப் பொலிஸ் கோஷ்டிக்கு இன்ஸ்பெக்டர் திரு.டிலிப் குமார் செல்வராஜ் தலைமை தாங்கிச் செல்கின்றார்.

5 பேர் கொண்ட இப் பொலிஸ் குழுவில் ஏனைய நான்கு அதிகாரிகளும் சிங்களவர்களாவர் (15)

# விவசாய போதனாசிரியர் தொழிற்சங்கம் உருவானது

வடக்கு, கிழக்கு மாகாண விவசாயப் போதனாசிரியர்களுக்கான தொழிற்சங்கம் ஒன்று திருகோணமலையில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட் பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணியாற்றும் விவசாயப் போதனாசிரியர்களின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி சிறப்புறச் செய்வதற்காகவே இத்தொழிற்சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இத்தொழிற்சங்க அங்குரார்ப்பணக்கூட்டத்திலே சங்கத்தின் தலைவராக திரு. வி. தியாகராசாவும் செயலாளராக திரு. ஐ. கேதீஸ்வரனும் பொருளாளராக திரு. எம். கார்த்திகேயனும்தெரிவுசெய்யப்பட்டனர்.

இத்தொழிற்சங்கத்தின் பொதுக்கூட்டமொன்றும் இம்மாதம் 27 ம் திகதி வவுனியா சைவபிரகாச வித்தியாசாலையில் நடைபெறுமெனச் செயலாளர் திரு.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.(15)

## யாழ். சைவ சித்தாந்த பீட நிதி:

# கடல் கடந்த நம்மவர் ஒத்துழைப்பு தொடர்கிறது

யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கவிருக்கும் சைவ சித்தாந்த பீடநிதிக்கு வெளிநாடுகளில் வேலை செய்யும் நம்மவர்கள் பலரும் நிதியுதவி வழங்கி வருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வகையில் கலிபோர்ணியாவில் வேலை பார்க்கும் டாக்டர்சண். கே. சுந்தர் என்பவர் அண்மையில் இரண்டு இலட்சம் ரூபாவை இந்த நிதிக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிதிக்கு எதிர் பார்த்த இலக்கு பதினைந்து இலட்சம் ரூபா என்றும் இன்னமும் மூன்று இலட்சம் ரூபா இந்நிதிக்குத் தேவைப்படுவதாகவும் அவர் சொன்னார்.

## மலையகத்தில் இருந்து ...

இத்தகைய சூழ்நிலையை, கேலி பேசும் வேடிக்கை மனிதர்களும், போக்கிலிகளும், நன்றாகவே பயன்படுத்திக் கொள்கின்றனர்.

கடன் பணம் கிடைப்பதற்குச் சிறிதுகாலம் எடுப்பதால் இவ் இடைக்காலத்தைக் கழிக்கச் சிரமப்படும் இவர்கட்கு உதவ 'சமூக சேவை' என்ற பெயரில் பலர் வருகின்றனர். முதலில் சாப்பிடுங்கள், பின்னர் பணம் தாருங்கள் என்ற அடிப்படையில் வழங்கப்படும் உணவுப் பார்சல்களுக்காக தங்கம், வெள்ளியால் ஆன நகைகள் ஈடாக்கப்படுகின்றன. இந்நகைகளை மீட்கும்போது மாதம் 60%க்கும் அதிகமாக வட்டி செலுத்த நேரிடுகிறது.

களவு பற்றிச் சொல்லிமாளாது. மே மாதம் 21ஆந் தேதி ஏறத்தாள 6000/- ரூபாய் பெறுமதியான பொருட்களும் ரேடியோ 3பவுண் நகைகளும் அடங்கிய பெட்டி ஒன்றை P. செல்லையா என்பவர் களவு கொடுத்தார்.

இவர் இது பற்றி போலீசுக்கு முறையிட்டபோது, போலீஸார் இதை நம்பவே இல்லை. செல்லையாவிடம் இப் பொருட்களை வைத்திருந்தமை பற்றி கேலி பேசினர். செல்லையா எல்லா இடமும் வலை போட்டுத் தேடினார், குப்பைக் கூளத்தில் தனது பெட்டியைக் கண்ட அவர் காவலருக்கு அறிவித்தார். அப்போது காவலர், பெட்டியை வீட்டுக்குத் தூக்கிப் போய் சுத்தம் பண்ணி சென்ட் போட்டு விட்டு கூப்பிடு வருகிறோம் எனக் கூறிரானாம்.

13 வயது நிரம்பிய புஷ்பா என்பவரின் தோடு அவர் பெற்றோர் முன்னிலையிலேயே பிடுங்கப்பட்டது. போலீஸார் இதனைக் கண்டு சொள்ளவே இல்லை. அத்துடன் போலீஸார் திருட்டர் பக்கம் சாய்வதோடு, பெறுமதியான பொருட்களை வைத்திருந்தமைக்காக இந்தஏதிலிகள் மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

முகாமில் குளியலறை, கழிவறை பற்றிச் சொல்லவே தேவையில்லை, அரசு, தனியார் ஊழியர்களும், சில தனி மனிதர்களும் மண்டபம் முகப்பிலுள்ள குளியலறை, கழிப்பறைகளை தமது சொந்தப் பாவிப்புக்குப் பயன்படுத்துவதுடன், ஏனைய நேரங்களில் பூட்டி வைத்து விடுகின்றனர். இதனால் பாவிப்புக்கு மறைவிடமற்ற இவர்கள் இளம் பெண்கள் உட்பட பலரும், காலிகளின் கண் வீச்சுக்கும், இச்சை மிகுந்த வார்த்தைகளுக்கும் மத்தியிலேயே குளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது, கழிவறைகளுக்குக் கூட கதவில்லை,

இதனால் பெண்கள் தமது இயற்கையின் அழைப்புக்கு முன்னிரவு நேரங்களிலும், அதிகாலை இருட்டிலுமே செல்ல வேண்டியுள்ளது. இந்த இருளான சூழ் நிலை காமப்பித்தர்களுக்கு வாய்ப்பளித்து விடுகிறது. இத்தகைய கற்பழிப்புக் கொடுமையெல்லாம் காவலர் கண்ணில் படுவது கூட இல்லை. இன்னும் வக்கரித்த முகமுடைய காமப்பித்தர் சிலர் தாம் அனுபவித்த பெண்களின் பெயர்களை இக் கழிவறைச் சுவர்களில் திகதிப்படி குறித்து வைக்கின்றனர்.

## பிரயாணச் செலவு

தமிழ்நாட்டின் தூர இடங்களுக்குத் தங்குவதற்காகச் செல்வோருக்கு ரூபா 200 — 300 வரை அலவன்சு வழங்கப்படுவது உண்டு. ஆனால் இத்தொகையை வழங்குவதை கடைசி நிமிடம்வரை தள்ளிப் போடும் பியூன்கள், இறுதி நேரத்தில் அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டு, வாரண்ட் (Warrant) மட்டும் கொடுத்து விட்டு பணத்தை ஏப்பம் விட்டு விடுகின்றனர். பின் கள்ள வவுச்சர்களைத் தயாரித்து போலி முத்திரையிட்டு ஆடிட்டர்களுக்கு நிரூபிக்கின்றனர்.

இங்கு காளிதாஸ் என்னும் பியூன் மீண்டும் அரங்கிற்கு வருகிறான் மண்டபம் இராமேசுவரத்தில் கிடைத்த தகவல்களின்படி ராமநாதபுரம் கீழக்கரையில் (அவனது சொந்த ஊரில்) ரூபா 7 இலட்சம் பெறுமதியான கட்டிடங்களை வாங்கியுள்ளதாகத் தெரிகிறது

இக் காளிதாஸ் ஏய்க்கும் கட்டிட கண்டிராக்டர்களுடன் தொடர்பு கொண்டு ஏதிலிகளுக்கும் அவர்களுக்கும் தொடர்பு ஏற்படுத்துவதனால் பெரும் பணம் சம்பாதிக்கின்றான் இக்கட்டிட காண்டிராக்டர்களின் உண்மை உணராது ஏதிலிகள் வீடு கட்டுவதற்காக தமக்கு வழங்கப்படும் 5000 ரூபாவையும் வீணாக்கினர்.

இங்கு குடியேற்ற வீடுகளைப்பார்த்த் பொழுது அரையும் குறையுமாக, கூரையோ தரையோ முகடோ செப்பனின்றி பாழடைந்த நிலையில் இருப்பதை மதுரை புதுக்கோட்டை போன்ற இடங்களில் காண முடியும். முற்றாக்கப்பட்ட இந்த வீட்டு திட்டங்களில் கூட யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில் உயரமான வறண்ட அப்பகுதியில் 5000 அடி தோண்டினால் தான் முதல் துளி நீரைக் காணலாம், அது தான் தமிழக அரசினரால் பலத்த விளம்பரத்துக்கு மத்தியில் அகதிகளுக்கு வழங்கப்பட்ட வீடமைப்பு விவசாயத் திட்டங்களாகும்.

இவ் வேகிலி மக்களுக்கு தாமேபெருத்ததொண்டுசெய்வதாக (UFFR) UFFR (W) மைத்திரி(Maitrl)செரக் (Cherak) ஆகியவற்றைச் சேர்ந்த சிலர் தம்பட்டம்அடிப்பதாகத் தெரிகின்றது.

ஆனால் இவை பற்றி அகதிகளிடையே வேறுவிதமாகப் பேசப்படுகிறது. இவர்கள் வந்து எமது வறுமை நிலையை படம் பிடிப்பர். சோகக் கதைகளை டேப் பண்ணுவார்கள். இவற்றின் மூலம் வெளிநாட்டு உதவிகளைப் பெறுவார்கள், ஆனால் அவை எம்மை வந்தடையா. (Tan India Viscos என்ற அகதிகளுக்கு வேலை வழங்கும் நிறுவனங்களின் சார்பில் கட்டியுள்ள குடியிருப்புகள் மிகவும் மோசமானவையாகவும், வருத்தம் தருவனவாகவும் உள்ள சேரிக் குடியிருப்புக்கள் ஆகும்.

கொடைக்கானல் பகுதியில் வாழும் கறுப்பன் என்பவன் தமிழ்நாட்டை தாபகமாக கருதியதன் தவறை இப்போது உணர்வதாக கூறினார். இவர் 14 மணிநேரம் முதுகொடிய மரம்வெட்டி Viscos நிறுவனத்திற்கு வழங்குவதன் மூலம் நாளொன்றிற்கு ரூபா 10/— பெறுகிறார். Tan India என்ற நிறுவனத்தில் பட்டை உரிக்கும் தொழிலாளியாக உள்ள சுப்பிரமணியன் என்பவர் கூறுகையில் ''ஸ்ரீலங்காவில் எமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் ஓரளவுபொறுத்துக் கொள்ளத்தக்கவை.

ஆனால் இங்கே, எமது சகோதரர்களே எம்மைக் கட்டாயப்படுத்தி பட்டினி கிடக்க வைப்பதுடன் எமது பெண்களைக் கற்பழிக்கின்றனர்'' என்றார்.

மத்திய அரசின் பாராமுகம் ஸ்ரீலங்கா அகதிகளை அகதிகளுக்கு முன்னுரிமை வழங்கும் பட்டியலில் மூன்றாம் இடத்திற்குத் தள்ளி விட்டுள்ளது. 1964ல் சிறிமாவுக்கும் சாத்திரிக்கும் இடையே நடந்த காகித ஒப்பந்தத்தினால் ஏறத்தாழ நான்கு இலட்சம் மக்கள் தமது வீடு, வாசல் வேலை சொந்த நாடு ஆகியவற்றை விட்டு வெளியேறி தமக்கு அன்னியமான (எம். ஜி. ஆர்.) இடத்தில் குடியேறி இரண்டாம் தரப் பிரசைகளாக வாழ நேரிட்டுவிட்டது.

அவர்களுக்கு மீட்சியே இல்லையா என்ற அவலக் குரலையே எழுப்பவேண்டியுள்ளது. பொதுவாகப் பார்க்கும் இடத்து மத்திய அரசோ இவர்களைப்பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இதுதான் தமிழகம் திரும்பிய மலையக மக்களின் நிலை.

## ஏழாலை மேற்கில்...

ஏழாலை மேற்குப் பகுதியில் பல அபிவிருத்தித் திட்டங்கள் துரிதகதியில் மேற்கொள்ளப் படவுள்ளன.

இந்த வகையில் இப்பகுதி கிராம சேவையாளர் திரு. சி. சக்திகிரீவன் முனைப்புடன் பொது மக்கள் ஒத்துழைப்புக் கொண்டு செயற்பட்டு வருகின்றார்.

## இன்று நாள் எப்படி?

**மேடம்:** வாக்குக் கலகம், பணமுடை, வணிகர்கள் சமபலன், கல்வியால் தொழில், காதலர் மகிழ்ச்சி, உத்தமர்உறவு.

**இடபம்:** புண்ணிய வழிபாடு, புகழ் தேடி வரும், வாகன சுகம், வணிகர்கள் கடற் தொழில் செய்வோர் இலாபம்.

**மிதுனம்:** தேடியவர் வருகை, உதவிக்கு உபத்திரவம், நெடுநாள் பகை தீரும், நீண்ட நாள் பிரயாண நிவர்த்தி.

**கடகம்:** எண்ணியது நடக்கும், வாக்குப் பலிதம், சுகஜீவியம், வணிகர்கள், கடற் தொழில் இயந்திரத் தொழில் மூலம் இலாபம்.

**சிங்கம்:** உடல் ரோகம், பணவிரையம், மனக்கிலேசம், சினேகிதருதவி, வாகன இலாபம்.

**கன்னி:** தேடியவர் வருகை, பணப்புழக்கம், உயர் பதவி, உத்தமர்உறவு, இளைய சகோதர வழியுதவி...

**துலாம்:** புகழ் தேடி வரும், புதுத்தொழில், பெரியோராசி, எண்ணியது நடக்கும், வணிகர்கள் இலாபம்

**விருச்சிகம்:** சுகஜீவியம், பணப்புழக்கம், இராஜமரியாதை, வாகன மாற்றம், தேடியவர் வருகை.


**தனுசு:** உயர் பதவி, உத்தமர் உறவு, தூரத்துப் பிரயாண நிறைவு, இளைய சகோதரருதவி, புதுத் தொழில்.

**மகரம்;** புகழ் தேடி வரும், கல்வியால் கௌரவம், பிரிந்தவர்கள் ஒன்றுசேருதல், திடீர்ப் பிரயாணம்.

**கும்பம்;** மாமன் வழியுதவி வாகன சுகம் பெரியோராசி பெண்களாலுதவி, வணிகர்கள் இலாபம்.

**மீனம்:** கலைஞர்கள் கௌரவிக்கப்படல், காதலர் ஒன்று சேருதல், வாகன சுகம், வணிகர்கள் கடற் தொழில் மூலம் சமபலன், பிரயாண சுகம்.

யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்



உலகின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள தொழிலாளர் இயக்கங்களுடன் சேர்ந்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மே தினப் பேரணிகள் பல்வேறு ஐரோப்பியத் தலைநகரங்களில் சிறப்பாக இடம்பெற்றன. இங்கே படத்தில் பாரிஸில் பலம் வாய்ந்த தொழிலாளர் அமைப்பான சி. ஜி. ரி. யுடன் இணைந்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் பதாகை தாங்கி அணிவகுத்துச் செல்வதைக் காணலாம்.


முரசொலி அனுசரணையுடன்
வவுனியா-புதுக்குளம்
சித்திவிநாயகர் விளையாட்டுக்கழகம் நடாத்தும்
12-வது வருடாந்த
விளையாட்டுப் போட்டி

115 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டிக்குரிய விண்ணப்பம்

முழுப்பெயர்..........................................

விலாசம் ..............................................

மாவட்டம் ............................................

அதிர்ஷ்ட இலக்கம்.....................................

போட்டியால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்குக் கழகம் பொறுப்பாளி அல்ல என்பதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

திகதி — விண்ணப்பதாரியின் ஒப்பம்

இன்று மாலை 6 மணிக்கு முன்பு சித்திவிநாயகர் விளையாட்டுக் கழக செயலாளரிடம் விண்ணப்பங்களை நேரடியாக ஒப்படைக்கலாம்.

## வடபிராந்திய கல்விப் பணிப்பாளராக சுந்தர் நியமனம்

யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் வட பிராந்திய கல்விப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய பிரதேசங்களுக்குப் பொறுப்பான கல்விப்பணிப்பாளராகவே தற்போது நியமிக்கப் பட்டுள்ளார். (3)

## அடைவு நகைகளுக்கு நஷ்டஈடு ஏன் வழங்கவில்லை

தொல்புரத்திலுள்ள பிரபல தனியார் நகை அடைவு பிடிக்கும் கடையொன்றில் கடந்த 1985-ம்ஆண்டில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தின் போது கொள்ளையடிக்கப்பட்ட அடைவுநகைகளுக்கான நஷ்ட ஈடு எதுவும் அக்கடையில் அடைவு வைத்தவர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை என்றுதெரிவிக்கப்படுகின்றது.

தங்களின் நகைகளுக்கு நஷ்ட ஈடு தரப்படவேண்டும் என்று அடைவு கடையின் உரிமையாளரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தும் இது வரை தங்களுக்கு எந்த வித நஷ்ட ஈடும் தரப்படவில்லை என்று இவர்கள் மிகுந்த கவலையுடன் தெரிவிக்கின்றார்கள். (13)

### கல்விப் பணிப்பாளர்

## இடமாற்றும் சபைக்கு மூன்று அதிகாரிகள் நியமனம்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள கல்விப்பணிப்பாளர்களின் இடமாற்றங்களை மேற்கொள்ளும் இடமாற்றுச் சபைக்கு மூன்று அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு. கொ. கணேசநாதன், கல்விச் செயளாளர் திரு. ஈ, கே. சற்குணராஜா, கல்விச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் ஆகியோரே மேற்படி சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள். (03)

### இராணுவ முகாமாக பாவிக்கப்பட்ட

## மட்டு. கரடியனாறு விவசாயப் பண்ணை மீள இயங்கும்

மட்டக்களப்பு கரடியனாறு விவசாயக் கல்லூரியும் விவசாயப் பண்ணையும் இம்மாத இறுதியிலிருந்து ஆரம்பிக்கப்படும் என மட்/ மாவட்ட விவசாய திணைக்களப் பணிபபாளர் திரு, கே. தேவதாஸன் தெரிவித்தார்.

விவசாயப் பண்ணையின் நாற்று மேடைகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக இராணுவம் முகாமிட்டிருந்ததால் இக் கல்லூரியும் இத்துடன் இணைந்த விவசாயப்பண்ணையும் முடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (05)

### பிரிட்டிஷ் கவுன்ஸில் ஆதரவுடன்

## யாழ் பல்கலைக் கழகத்தில் நூல் கண்காட்சி, கருத்தரங்கு

யாழ் பல்கலைக் கழகத்தில் ஜூன் மாதம் 3ம், 4ம் திகதிகளில் புத்தகக் கண்காட்சியும் 4ம் திகதி எழுத்தாண்டுக்கான கருத்தரங்கும் நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக் கழகத்தினதும் இலங்கை நூலக சங்கத்தினதும்ஆதரவுடன் பிரிட்டிஷ கவுன்ஸிலினால் நடாத்தப் படவுள்ள இக் கருத்தரங்கில் அக்கவுன்ஸில் உயர் அதிகாரிகள் இருவரும் ஊழியர்கள் மூவரும் கலந்து கொள்வதுடன், யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் திணைக்களத் தலைவர்கள், பேராசிரியர்கள் நூலக உதவியாளர்கள் வட. கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற நூலகர்கள். உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

இது முழுநாள் கருத் தரங்காக இருக்கு மென்றும், இக் கருத்தரங்கில் பங்குபற்றும் அனைவருக்கும் மதிய போசனம் வழங்கப்படும் என்றும், யாழ் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு க. பரமசிவம் தெரிவித்துள்ளார். (4)

## மட்டு மாவட்ட ரீதியில் கலை; கலாசாரப் போட்டிகள்

மட்டக்களப்புப் பிரதேச சபைகளைஊக்குவிக்குமுமாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச கலாமன்ற ஒன்றியம் மாவட்ட ரீதியில் கலைகலாசாரப் போட்டி ஒன்றினை நடாத்த முன்வந்துள்ளது,

ஒரு மணிநேர நாடகம், குறியீட்டு நாடகம், நாட்டிய நாடகம், நாட்டுக் கூத்து, நாட்டியம், கும்மி, போன்ற கலை அம்சங்கள் இந்த போட்டியில் இடம் பெறும்.

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் தனிநபர்கள், குழுக்கள், பின் வரும் முகவரிக்கு தங்கள்விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம், பிரதேச கலாமன்ற ஒன்றியம் மண்முனை தென் எருவில் பற்று, களுவாஞ்சிக்குடி. (05

### கைது

என பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா தெரிவித்துள்ளார்'

தற்போது 'மலையகப்பகுதியில் அமைதி நிலவுவதாகவும் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

# யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது

யாழ் பல்கலைக் கழகத்தில் பல துறைகளிலும் பேராசியர்களினதும் விரிவுரையாளர்களினதும் பற்றாக்குறை நிலவுகிறது.

சைவசித்தாந்தத்தில் பேராசிரியர்கள் (அறக் கொடைத் தவிசு) உடலமைப்பியல் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் விரிவுரையாளர், மகப் பேற்றியலிலும் மாதர் நோயியலிலும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் விரிவுரையாளர், மருத்துவப் பேராசிரியர், உடலமைப்பியல் பேராசிரியர், மன நோயியல் பேராசிரியர் அங்கக் கோணல் அறுவை மருத்துவ அறக்கொடைத் தவிசு, களலையியல் அறக் கொடைத் தவிசு, போன்ற வெற்றிடங்களும் தகுதியா விண்ணப்பங்கள் கிடைக்காமையினால் அந்த இடங்கள் காலியாகவே உள்ளன.

இப் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள பற்றக் குறையானது மாணவர் களைப் பெரிதும் பாதிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (4)

### மன்னாரில் நினைவு தினம்

லெப்டினன் கேர்ணல் ராதாவின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலியும் முள்ளிக்குளத்தில் வீரமரணமடைந்தவிடுதலைப் புலிகளின் நினைவு தினமும் நாளையும் நாளை மறு தினமும் முள்ளிக்குளம் லெப். கேணல் ராதா விளையாட்டரங்குகில் நடைபெறும் மன்னார் மாவட்ட விடுதலைப் புலிகள் பிரமுகர்களும் இதில் கலந்து கொள்வர் விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

### காலாவதி

யாது நோயாளர்கள் வாங்கி உட்கொண்டால் பல எதிர் விளைவுகள் ஏற்படும் என்று மருந்துச்சாலை உரிமையாளர்களை கடுமையாக எச்சரிக்கை செய்த இக்குழு வினர் அவற்றை உடனடியாக அழித்து விடுமாறு உத்தரவிட்டனர் (சங்கானை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிலும் இக் குழுவினர் கடந்த வாரம் தனியார் பாமர்சிகளில் திடீர் பரிசோதனை மேற்கொண்டு பல முறை கேடுகளை கண்டு பிடித்து எச்சரிக்கை செய்ததாக அறியப்படுகின்றது. (13)

### தமிழர்—

கவனிக்கப்பட்டு வருகின்றது.

இக்கூட்டத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து வரும் பல்லாயிரக்கணக்கான தமிழர் ஆசிரியர்கள் கலந்து கொள்வார்கள். இம் மகாநாட்டில் மத்திய மாகாண அமைச்சின் சில அதிகாரிகளும். சில வெளிநாட்டுப் பிரமுகர்களும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் சங்கத்தின் சகல கிளைகளினதும் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து நடாத்தும் பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்படுவார்கள். தற்போதைய நிர்வாகிகள் பலர் தனிப்பட்ட காரணங்களுக்காக தொழிற் சங்க வேலைகளில்இருந்து ஓய்வுபெறவிரும்புவதாகவும் புதிய நிர்வாகிகளில் பல புதுமுகங்களைக் காணக்கூடியதாகவும் இருக்குமென சங்கத்தின் சிரேஷ்ட நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

## புதிய உணவு முத்திரை பொருள் இம்மாதம்வரை வாங்கலாம்

புதிய உணவு முத்திரைகளுக்கு பொருட்கள் பெறுவதற்கான கால எல்லை இம் மாதம் 31ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அதிகமானவர்களுக்கு உணவுமுத்திரை விநியோகிக்கப் படாத காரணத் தினாலேயே மேற்படி கால எல்லை அதிகரிப்பட்டுள்ளது.

உணவுமுத்திரை பெற்றோர் தமது பகுதிப் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் 31ம் திகதிக்கு முன்னர் உணவுப் பொருட்களை பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## சூழல் பாதுகாப்பு நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் சூழல் பாதுகாப்பை பலப் படுத்த சூழல் பாதுகாப்பு சபையும் உள்ளூராட்சி திணைக்களமும் இணைந்து நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

வீதி ஓர மரநடுகை திட்டத்தை துரிதப்படுத்தஉள்ளூராட்சி திணைக்களம் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கே. நடராசா தெரிவித்தார்.

சூழல் அசுத்த மாவதை தடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (05

### வவுனியா...

கொள்வார்.

கலை நிகழ்ச்சிகளில் முக்கிய அம்சமாக முள்ளியவளை கலைத்தாய் நாடக மன்ற சனசமூக நிலையம் வழங்கும் 'பண்டாரவன்னியன்' (நாட்டு கூத்து) என். எஸ். மணியம் வழங்கும் ஊர்திருந்தட்டும்'க்' (சமூக நகைச்சுவை இசை நாடகம்) விமலலோஜினி கனகேஸ்வரனின் வயலின் இசை கம்சாயினி பஞ்சாட்சரத்தின் நடனநிகழ்ச்சிகள் மணிபுரத்து மாமன்னன்" எனும் அரச நாடகம் என்பன இடம் பெறும்.

இறுதி நிகழ்ச்சியாக பரத சூடாமணி துவாரகாவின் பரதநாட்டியம் நிகளும்.

### யாழ் கொழும்பு..

யிலிருந்து புறப்படும் ரயில் திங்கள் காலை மூன்று முப்பதுக்கு கொழும்புக் கோட்டையை சென்றடையும் என ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன

## காலமானார்

### செபஸ்தியாம்பிள்ளை மேரி மாகிறெற் லில்லி

மாதகல் திருமதி செபஸ்தியாம்பிள்ளை மேரி மாகிறெற் லில்லி காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை சின்னத்துரை அவர்களின் மனைவியும். லூர்து அன்ரனி பதிலதிபர்- சென் கென்றீஸ் கல்லூரி இளவாலை; யேசுதாசன் (ஆனந்தராசா) சாரதி, கச்சேரி மன்னார்; அருட் சகோதரி பாஸ்கால், அதிபர்- ''Little Flower Convent'' கரம்பன் மேரி ஆன் ஜெயமலர் ஆசிரியை-கஞ்சிமட மகாவித்தியாலயம் திருகோணமலை; மரியகொறற்றிமல்லிகா கச்சேரி மன்னார் ஆகியோரின் தாயாரும்; ஜெயமணி, ஜெயா சேவியர் (பாலன்) Power House திருகோணமலை; அன்ரனி கிறிசாந்த் ஓமான் ஆகியோரின் மாமியாரும்; ஜோசவ் ஜெயக்குமார், லூட்ஸ் ஜெயக்குமாரி, பிறிம் றோஸ், ஜெயானந்தி, செபஸ்தியன் ஜெயானந், செபஸ்தியாம்பிள்ளை விஜயகுமார் ஆகியோரின் பேத்தியும், பொன்ராசா இரத்தினம், இரத்தினசாமி பொன்னுக் கண்டு ஆகியோரின்சகோதரியும், அருட்திரு டொன்பொஸ்கோ -செபமாலை தாசர் சபை அதிபர் தோலகட்டி; அருட் செல்வி ஜீவமலர்-புனித சவேரியார்கன்னியர்மடம், மன்னார்; புஸ்பரத்தினம்(கனடா), துரைரத்தினம்(கனடா) ஜெயரத்தினம்(கனடா), யேசுமலர்பெனடிக்ற், பற்றிமா மேரி தனேந்திரன் ஆகியோரின் பெரிய தாயாருமாவார்

நல்லடக்கம் 19ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மாதகலில் நடைபெறும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திரு. லூர்து அன்ரனி
(மகன்)

05132

இ' பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினால்யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 6[illegible] இலக்கத்திலுள்ள அச்சகப்]பிரிவில் 18.05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெறது